**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் I பரீட்சை – 2025 யூலை**

## (103) பொருளியல்

அதிகளவான பரீட்சார்த்திகள் அளவு ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்க மட்டத்தில் இந்த பொருளியல் வினாத்தாளுக்கு விடையளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளால் சில வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட தரத்திற்கு விடைகளை அளிக்க முடியாமையை காணக்கூடியதாக இருந்தது.

மதிப்பீட்டுப் பணியின்போது பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்ட பிரதான சில தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன :

**பகுதி A**

### வினா இல. 01

இந்தப் பகுதி பொருளியல் பாட பாடத்திட்டத்தினுள் உள்ள பரந்தளவான விடயங்களை உள்ளடக்கி கட்டமைக்கப்பட்டிருந்தது. ஒரு கட்டாய வினாவாக, அடிப்படைப் பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களின் அடிப்படையில் நோக்கச் சோதனை வினாக்களை இது உள்ளடக்கியிருந்தது.

இல. **1.1** தொடக்கம் **1.10** வரை பத்து பல்தேர்வு வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இல. **1.11** தொடக்கம் **1.12** வரையான வினாக்களில் தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. அதே வேளை இல. **1.13** தொடக்கம் **1.14** வரையான வினாக்களில் தரப்பட்ட ஒவ்வொரு கூற்றும் **"சரியானதா"** அல்லது **"தவறானதா"** எனக் கேட்கப்பட்டது. இல. **1.15** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை உமது விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு எழுதுமாறு கேட்கப்பட்டிருந்தது.

அதிகமான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு வெற்றிகரமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பலவீனமான விடைகளை அளித்திருந்தனர். எனவே, அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்களை கீழ்வருமாறு கோடிட்டுக் காட்டலாம் :

**1.1.** 'காணி' என்ற உற்பத்திக் காரணிக்கான வெகுமதியாக இருப்பது 'வாடகை' என்பதை பல பரீட்சார்த்திகள் சரியாக இனங்கண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**1.2.** பொருளியலின் ஒரு அடிப்படை எண்ணக்கருவான 'அரிதானதன்மை' பற்றிய இவ்வினாவுக்கு பல பரீட்சார்த்திகள் அரிதானதன்மை தெரிவுகளை உருவாக்குகிறது என சரியான விடையை அளித்திருந்தனர்.

**1.3.** சில பரீட்சார்த்திகள் கேள்வி நெகிழ்ச்சி பற்றிய இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடை அளித்திருக்கவில்லை. குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சிச் சூழமைவில் பிரதியீட்டு மற்றும் நிரப்புப் பொருள்களுக்கு இடையேயுள்ள வேறுபாடு தொடர்பில் அவர்கள் குழப்படைந்திருந்தனர்.

1.4. சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையிடுவதற்கான பிரதான காரணம் பற்றி கேட்கப்பட்ட இவ்வினாவுக்கு பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளிக்கவில்லை.

1.5. இலங்கை மத்திய வங்கியின் 2024 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின்படி, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் பற்றிக் கேட்கப்பட்ட இவ்வினாவுக்கு பல பரீட்சார்த்திகளால் சரியான விடை அளிக்க முடியவில்லை. பரீட்சார்த்திகள் மத்திய வங்கி அறிக்கை உள்ளிட்ட பொருளியல் சார்ந்த புத்தகங்களில் நெருக்கமான அவதானத்தைச் செலுத்த வேண்டுமென பரிந்துரைக்கப்படுகிறது.

1.6. சந்தைப் பொருளாதார முறைமை ஒன்றின் பண்புகள் பற்றிய தவறான கூற்றை இனங்காணுமாறு கூறிய இவ்வினாவுக்கு பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடை அளித்திருந்தனர்.

1.7. அதிகளவான பரீட்சார்த்திகள் தனியுரிமைப் போட்டிச் சந்தை பற்றிக் கேட்கப்பட்ட இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

1.8. சராசரி மொத்தக் கிரய வளையியின் இழிவுப் புள்ளியில் எல்லைக் கிரயமானது சராசரி மொத்தக் கிரயத்திற்குச் சமமாகும் என்பதை இனங்காணச் சில பரீட்சார்த்திகள் தவறியிருந்தனர்.

1.9. நிரம்பல் கணியத்தில் ஏற்படும் விரிவாக்கம் பற்றிக் கேட்கப்பட்ட இவ்வினாவுக்கு நிரம்பல் வளையி வழியே மேல்நோக்கிய நகர்வு என பல பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர்.

1.10. குறுங்கால உற்பத்திச் செயன்முறை பற்றிய பிழையான கூற்றைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்ட இவ்வினாவுக்கு விடையளித்த சில பரீட்சார்த்திகளிடையே குழப்பநிலை காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

1.11. பயன்பாட்டுக் கோட்பாட்டில் உள்ள அளத்தகு மற்றும் ஒப்புமையான எண்ணக்கருக்கள் பற்றிய போதுமான அறிவை பல பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

1.12. மாறாத தொழினுட்பம் என்பது உற்பத்திச் சாத்திய வளையியின் ஓர் எடுகோள் என்பதை சரியாகக் குறிப்பிட்டு பல பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

1.13. தரப்பட்ட காலப்பகுதியில் உள்ள வெளியீட்டின் அலகொன்றிற்கான கிரயமானது எல்லைக் கிரயம் என அழைக்கப்படுகிறது என்பது ஒரு தவறான கூற்றாகும் என்பதை பல பரீட்சார்த்திகள் சரியாக இனங்கண்டிருந்தனர்.

1.14. நிறைபோட்டி நிறுவனமொன்று நீண்ட கால ஓட்டத்தில் சாதாரண/ பூச்சிய பொருளாதார இலாபங்களை உழைக்கிறது என்பது சரியான கூற்று என்பதை பல பரீட்சார்த்திகள் இனங்கண்டிருந்தனர்.

1.15. ''பேரினப் பொருளியல்'' இற்கும் ''நுண்பாகப் பொருளியல்'' இற்குமிடையிலான வேறுபாடு பற்றி பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட இவ்வினாவுக்கு அவர்கள் வெற்றிகரமாக விடை அளித்திருந்தனர்.

1.16. பணவீக்கத்திற்கான காரணங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்த இவ்வினாவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பரீட்சார்த்திகள் மாத்திரம் கேள்வி இழுப்பு பணவீக்கம், கிரயத் தள்ளல் பணவீக்கம் ஆகியவற்றைத் தெளிவாக விளங்கிக்கொண்டு

வெற்றிகரமாக விடை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் எவ்வித விடைகளையும் அளித்திருக்கவில்லை.

**1.17.** பல பரீட்சார்த்திகள் நிரம்பல் விதியைச் சரியாகவும் சுருக்கமாகவும் விபரித்திருந்தனர்.

**1.18.** நிரம்பல் வளையி இடப் பக்கமாக நகர்வதற்கான காரணங்களைப் பட்டியலிடுமாறு கேட்கப்பட்ட இவ்வினாவுக்கு பல பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

**1.19.** நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தியின் பொருளாதார விவரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் பற்றிய பரீட்சார்த்திகளின் புரிதல் மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்ததை அவர்களது விடைகள் சுட்டிக் காட்டுகின்றன.

**1.20.** சில பரீட்சார்த்திகள் நாணயக் கொள்கையின் தரம்சார் கருவியொன்றாக, திறந்த சந்தை தெரிவுகளைச் சரியானவாறு சுருக்கமாக விவரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகளிடம் இந்த எண்ணக்கரு பற்றிய தெளிவான புரிதல் காணப்படவில்லை.

## பகுதி B

இப்பகுதியானது ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைத் தாங்கிய நான்கு (04) கட்டாய வினாக்களை உள்ளடக்கியிருந்தது.

### வினா இல. 02

**(a)** பல பரீட்சார்த்திகள் பொருளாதாரமற்ற பொருள்களின் பண்புகளைச் சரியாகக் குறிப்பிட்டு, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** திட்டமிடப்பட்ட பொருளாதார முறைமை ஒன்றின் பண்புகளைப் பல பரீட்சார்த்திகள் வெற்றிகரமாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**(c)** பல பரீட்சார்த்திகள் தனியுரிமைச் சந்தையொன்றின் மூன்று பண்புகளைப் பட்டியலிட்டிருந்தனர். ஆனால், அவர்கள் பண்புகளை விபரிக்கத் தவறியதால் முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொள்ளவில்லை.

### வினா இல. 03

**(a)** **(i)** வழங்கப்பட்ட கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகளைப் பயன்படுத்தி சந்தைச் சமநிலை விலை மற்றும் கணியத்தைப் பல பரீட்சார்த்திகள் துல்லியமாகக் கணிப்பிட்டிருந்ததுடன் புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

**(ii)** குறிப்பிடத்தக்க அளவான பரீட்சார்த்திகளால் உற்பத்தியாளர் மிகையைச் சரியாகக் கணிப்பிட முடிந்திருந்தது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் மூலப் புள்ளி ஊடாகச் செல்லும் அச்சைக் கவனத்திற் கொண்டு உற்பத்தியாளர் மிகையைக் கணித்திருந்தனர்.

**(b)** ஆகக் குறைந்த விலையை விதிப்பதன் பொருளாதாரப் பின்விளைவுகளை அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விபரித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இந்தப் பகுதிக்கு 4 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் அடையத் தவறியிருந்தனர்.

### வினா இல. 04

**(a)** உதாரணத்துடன் அண்மைப் பணத்தைச் சரியாக வரையறுத்ததன் மூலம் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக பல பரீட்சார்த்திகள் விடை அளித்திருந்தனர்.

**(b)** பணத்திற்கான தேவையின் இரண்டு நோக்கங்களை விபரித்ததன் மூலம் இவ்வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடை அளித்திருந்தனர்.

**(c)** **(i)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி, குறுகிய பண நிரம்பலைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

**(ii)** அதிகளவான பரீட்சார்த்திகள் விரிந்த பண நிரம்பலைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

### வினா இல. 05

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் முழு நயக் கோட்பாட்டைச் சரியாக விபரித்திருந்தனர். ஆயினும் அவர்கள் சரியான உதாரணத்தை வழங்கத் தவறியிருந்தனர்.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் சர்வதேச வர்த்தகத்தின் பிரதிகூலங்களைப் பட்டியலிட்டிருந்தனர்.

**(c)** பல பரீட்சார்த்திகள் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கத்தின் விளைவுகளை விபரிக்கத் தவறியிருந்தனர். எண்ணக்கரு பற்றி விளங்கிக்கொள்ளாததன் காரணமாக, பல பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர்.

## <u>பகுதி C</u>

### வினா இல. 06

**(a)** உற்பத்தியாளரின் விலைக்கும் கொள்வனவாளரின் விலைக்கும் இடையேயான வேறுபாடு பற்றிய பரீட்சார்த்திகளின் புரிதல் போதியதாக இல்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் (a) மொத்த உள்நாட்டுச் செலவினம் – சந்தை விலையில், (b) மொத்த உள்நாட்டு உற்பத்தி – சந்தை விலையில், (c) மொத்தத் தேசிய வருமானம் – சந்தை விலையில் ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வெளிநாட்டு நிகர முதன்மை வருமானத்தைச் சீராக்கம் செய்யும்போது (+) அல்லது (-) பெறுமானங்களை தவிர்த்திருந்தனர். அதே வேளை பெரும்பாலானவர்கள் அவற்றைக் குறைத்திருந்தனர்.

**(c)** பல பரீட்சார்த்திகள் தேசியக் கணக்குகளைத் தயாரிப்பதன் மூன்று (03) முக்கியத்துவங்களை வெற்றிகரமாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**(d)** ஓர் அரசாங்கத்தின் தோல்விக்கான காரணங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்ட இந்த வினாவுக்கு பரீட்சார்த்திகள் விடையளித்திருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்குச் சரியாக விடை அளித்திருந்தனர்.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்த கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u> :**

**(1)** புதிய பாட விடயங்களில் அதிக கவனம் செலுத்தி பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிக்கவும்.

**(2)** உரிய கவனத்துடன் வினாவை வாசிப்பதுடன், நேரடி விடைகள் எதிர்பார்க்கப்படும்போது, தேவையற்ற விளக்கங்கள்/ விபரங்களை எழுத வேண்டாம்.

**(3)** வரைவிலக்கணங்களுடன்கூடிய **"செயல் வினைச்சொல் செவ்வை நிரல்"** வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச்சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்லின் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் புத்தகங்கள், கையேடுகள், பனுவல்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விடயங்கள் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள்.

**(5)** விடையளிக்கும்போது, அடிப்படைக் கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருக்களைச் சரியாக இனங்காணத் தேவையான ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ளுங்கள்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருப்பதுடன், வினா இலக்கங்கள் சரியாகவும் தெளிவாகவும் எழுதப்பட வேண்டும்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**(8)** கடந்த கால வினாத்தாள்களையும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளையும் கூர்ந்து ஆராய்வது அறிவையும் அனுபவத்தையும் கூர்மையாக்க உதவும்.

**(9)** பொருளியல் எண்ணக்கருக்களின் சரியான புரிதலைப் பெற்றுக்கொள்வதன் மூலம் ஒவ்வொரு எண்ணக்கருவுக்கும் இடையேயான வேறுபாட்டை ஒப்பீடு செய்வதற்கான ஆற்றல் கிடைக்கப் பெறும்.

**(10)** நேரத்தை சரியாக முகாமை செய்வது முக்கியமானதாகும்.

**(11)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன் வினா இலங்கங்களை மீளவும் பரிசோதிக்கவும்.

**(12)** முன்னேற்பாடு மற்றும் பரீட்சையில் வெற்றி பெறுவதற்கான மிகுந்த எதிர்பார்ப்புடன், தன்னம்பிக்கையுடன் பரீட்சைக்குத் தோற்றுங்கள்.

- * * * -